முற்பகல் 11–20

3. 14–6–2017 அன்று ஆங்கில தொலைக்காட்சியில் வந்த செய்தி குறித்து வழங்கப்பட்ட தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதற்கு நான் என்னுடைய தீர்ப்பை நேற்றே வழங்கிவிட்டேன். நீதிமன்றத்தில் இருப்பது குறித்து எந்தச் சூழ்நிலையிலேயும் நான் அனுமதிக்க மாட்டேன். நீதிமன்றத் தீர்ப்பு வரட்டும் என்று நான் நேற்றே தெளிவான தீர்ப்பை வழங்கிவிட்டேன். இருந்தும்கூட அவர்,—"பத்திரிகை செய்தியையோ அல்லது வேறு எந்த டி.வி.யிலோ" வந்த செய்தியையோ வைத்து இங்கே எந்தப் பிரச்சினையையும் எழுப்ப முடியாது; அதற்கு விதியில் இடமில்லை, நான் அனுமதிக்க மாட்டேன்" என்று தெளிவாக நேற்றைக்கே தீர்ப்பு வழங்கிவிட்டேன். ஆனாலும்கூட, இன்றைக்கு மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதே பிரச்சினையைக் கிளப்பி, என்னுடைய பதிலை மீண்டும் சொன்ன பிறகும்கூட, இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அவை எப்படியெல்லாம் நடந்திருக்கிறது; எப்படியெல்லாம் தீர்ப்புகள், இதுபோன்ற விவகாரங்களிலே, தரப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவையினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் நேற்றைக்கே இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். நான் மிகவும் பொறுமை காத்தேன். தி.மு.க. உறுப்பினர்கள் அமைதி காக்க கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் நான் போராடினேன். தற்போது இந்தப் பிரச்சினையை எழுப்பி இதுசம்பந்தமாக வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக, குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவரும், துணைத் தலைவரும் இங்கே பேசியபோது "பத்திரிகையில் வந்துள்ளது" என்று சொன்னார்கள். பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசினார்கள்.

ஆதாரம் பத்திரிகைச் செய்தி, அவர்கள் சொன்னது. நான்காவது சட்டமன்றப் பேரவையில், அப்போதைய பேரவைத் தலைவர் அவர்கள் 1972 இலே 'It is not in order to speak on the basis of newspaper reports' *என்றும்,* "Whenever Members refer

to the matters appearing in newspapers they should do so only after verifying the same" என்றும் தீர்ப்பளித்துள்ளார். அதேபோல, எட்டாவது சட்டமன்றப் பேரவையில், 1985 ஆம் ஆண்டுகளில் "பத்திரிகையை மேற்கோள் காட்டி பேசக் கூடாது" என அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள். அதேபோல, பத்தாவது சட்டமன்றப் பேரவையிலே "இன்றைய பத்திரிகைகளில் என்னென்ன வந்திருக்கிறது என்பது விவாதம் அல்ல" என்று 1996 ஆம் ஆண்டில் தீர்ப்பளித்திருக்கிறார்கள். பதினோராவது சட்டமன்றப் பேரவையில் "பத்திரிகையில் வந்த செய்தியை ஆதாரமாகக் கூறுவது சரியல்ல" என்று அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள். இதேபோல நிறைய தீர்ப்புகள் உள்ளன. இதுவரையில் நடைபெற்ற 15 சட்டமன்றப் பேரவைகளிலும் பேரவைத் தலைவர் விதிகளைப் பின்பற்றி, மரபுகளைப் பின்பற்றி தீர்ப்புகளை வழங்கியுள்ளார்கள். அதையேதான் நானும் பின்பற்றுகிறேன்.

ஏன் பத்திரிகை செய்தியை ஆதாரமாக வைத்து இங்கே விவாதிக்கக் கூடாது என்பதற்கு ஓர் உதாரணத்தை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்து 27—3—1997 அன்று இதே சட்டமன்றப் பேரவையில் விவாதம் நடைபெற்றது. அன்றைக்கு உறுப்பினராக இருந்த திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். அன்றைக்கு அவர் பேசியது, "பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, ஜுனியர் விகடன் போன்ற பத்திரிகைகளில் உண்மையிலேயே தமிழ் மாநிலக் காங்கிரசைச் சார்ந்திருக்கிற எங்களுக்கெல்லாம் பேரதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒரு கலர் போட்டோவை நாங்கள் பார்த்தோம்" என்று சொல்லி, ஒருசில கருத்துகளைச் சொல்கிறார்.

பின்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஆர். சொக்கர் ஆகியோரும் உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கருத்துக்கு வலு சேர்க்கின்ற விதத்திலேயே தங்கள் கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். பதிலுரை வழங்கிய அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், "ஏடுகளில் வந்துள்ள இந்தப் புகைப்படம் ஒரு புதிய திருப்பமாக அமைந்திருக்கிறது; இதுகுறித்து மாநில அரசு விசாரித்து, மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்" என்று சொல்லியுள்ளார்கள்.

அதன் பின்னர் பேசிய ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள், புகைப்படத்தில் உள்ளவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் என்று தெரிவித்ததால், அவருக்கு முன்னால் பேசிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துகளும் உண்மைக்கு மாறானதாகிறது.

முற்பகல் 11—25

எதற்காக ஏற்கெனவே நடைபெற்ற ஒரு நிகழ்வைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், பத்திரிகையிலே செய்தி வந்தாலும், நிரூபிக்கத்தக்க ஆதாரம் இல்லாத வரையில் அதுசம்பந்தமாக அவையில் பேசப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டால் அது சரியாக இருக்காது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அன்றைக்கு பேரவை முன்னவராக இருந்த மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2010 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் இங்கே உரையாற்றுகையில், “மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி தன்னுடைய காதுக்கு வந்தால்கூட, அது ஒரு குற்றச்சாட்டாக வடிவம் எடுக்கிறதென்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டு அறிந்த பின்னர்தான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். வெளியிலே எத்தனையோ செய்திகள் வரலாம். அப்படி வருகிற செய்திகளையெல்லாம் இங்கே பதிவு செய்வதற்கு இது ஒன்றும் பதிவுத் துறை அலுவலகம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், இந்த அவையிலே உள்ள யாரையும் அவமதிக்கிற செய்தியை வெளியிலே யார் சொன்னாலும் அதை மறுபடியும் இங்கே வந்து சொல்வதற்கு அனுமதி இந்த அவையிலே கிடையாது. அப்படி அவமதிக்கக்கூடிய, குறை சொல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டு இருக்குமானால், முன்கூட்டியே அதை அவைத் தலைவரிடத்திலே தெரிவித்து, அதற்கான ஆதாரத்தைக் காட்டிவிட்டு அதற்குப் பிறகுதான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். அப்படியல்லாமல் விதியை மீறிச் சொல்கிற செய்தி எதுவாக இருந்தாலும் இந்த அவையிலே பதிவு செய்யப்படக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்” என்று சொல்லியுள்ளார்.

அதேபோல 2011 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருந்தபோது உரையாற்றுகையில், “பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகளையெல்லாம் வைத்துப் பேசுவது முறையல்ல. தயவுசெய்து ஆதாரம் இருந்தால் பேசலாம்” என்று இதே அவையிலே பதிவு செய்திருக்கிறார்.

அதேபோல 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள், அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள், "பத்திரிகையில் வருகின்ற ஹேஷியங்களை வைத்து நாம் இங்கே விவாதம் செய்வது அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

மேலும், தி.மு.க. நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அதுசம்பந்தமான வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் இதுசம்பந்தமாக உறுப்பினர்கள் இங்கே பேசுவது சரியாக இருக்காது என்கிற காரணத்தால்தான் அதனை நான் அனுமதிக்க மறுக்கிறேன். நான் நேற்றைக்கே என்னுடைய தீர்ப்பை அளித்து விட்டேன். ஏதாவது ஆதாரம் இருக்குமென்று சொன்னால், அந்த ஆதாரத்தை என்னிடத்திலே கொண்டுவந்து கொடுத்தால், நான் அதை ஆய்வு செய்து, அது முறையாக இருந்தால் நிச்சயம் அனுமதிப்பேன் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்து, பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து யாரும் விமர்சிக்க முடியாது, தயவுசெய்து இத்துடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order எல்லாம் ஒன்றும் கிடையாது. உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.